செ.வெ.எண்.29 நாள்:17.11.2020

**நீலகிரி மாவட்டத்தில், வசிக்கும் நடமாட இயலாத நிலையில் உள்ள முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தகுதியான நபர் ஒருவரை நியாயவிலைக்கடையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள உரிய படிவத்தில் பூர்த்தி செய்து நியாயவிலைகடை பணியாளர் வசம் ஒப்படைத்து அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---

நீலகிரி மாவட்டத்தில், வசிக்கும் நடமாட இயலாத நிலையில் உள்ள முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள், கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றி தகுதியான நபர் ஒருவரை நியமனம் செய்து தங்களுக்குரிய அத்தியாவசியப் பொருட்களை நியாயவிலைக்கடையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

1. உடல்நலக் குறைபாடு அல்லது வயது மூப்பு காரணமாக நியாயவிலைக்கடைக்குச் சென்று உணவுப்பொருட்கள் பெற இயலாத குடும்ப அட்டைதாரர்கள், தங்களுக்குரிய அத்தியாவசியப்பொருட்களை நியாயவிலைக்கடையிலிருந்து பெற தகுதியான நபர் ஒருவரை நியாயவிலைக்கடையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள உரிய படிவத்தில் பூர்த்தி செய்து நியாயவிலைக்கடை பணியாளர் வசம் ஒப்படைத்து, அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுச் செல்லலாம்.
2. இப்படிவத்தில் இந்த அட்டைதாரர் சார்பில் உணவுப்பண்டங்கள் பெற அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் விபரம் தவறாது பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.
3. தொடர்புடைய விண்ணப்பதாரரின் குடும்ப அட்டையில் சம்பந்தப்பட்ட வயது முதிர்ந்த/ மாற்றுத்திறனாளிகள் தவிர நியாய விலைக்கடைக்கு வருகை தந்து பொருள் பெறும் தகுதியுடைய நபர்கள் பெயர் இடம்பெற்றிருப்பின், அவர்கள் இந்த வசதியினை தேர்வு செய்ய அனுமதியில்லை.
4. வட்ட வழங்கல் அலுவலர் அம்மனுவின் மீது, உரிய ஆய்வு மேற்கொண்டு கோரிக்கையின் உண்மைத்தன்மையை ஆராய்ந்து, தகுதியிருப்பின்

அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் வாயிலாக உணவுப்பண்டங்கள் பெறுவதற்கு அனுமதி வழங்குவார்.

5. அங்கீகரிக்கப்பட்ட நபர் உணவுப்பொருள் பெறுவதற்கு யாருக்காக பொருள் பெற உள்ளாரோ அவர்களது குடும்ப அட்டையினை எடுத்துச்செல்ல வேண்டும்.
6. கடைப்பணியாளர் குடும்ப அட்டை எண் அடிப்படையில் விற்பனை உள்ளீடு செய்து அங்கீகரிக்கப்பட்ட நபருக்கு பொருட்களை வழங்குவார்.

எனவே, நீலகிரி மாவட்டத்தில் உள்ள நடமாட இயலாத நிலையில் உள்ள மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர் இத்திட்டத்தினைப் பயன்படுத்தி பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட்திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.